நாள்: 23.10.2025
OP.50/2023 JTW OP 232/2024
பெயர் கீர்த்தனா
எ.ம.சா.1

குறுக்கு விசாரணை

நானும், என் கணவரும் எதற்காக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்பதை என்னுடைய மனு மற்றும் எதிருரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கும் என் கணவருக்கும் எந்த பிரச்சனை கிடையாது. என் மாமனார், மாமியாரால் தான் பிரச்சனை. மேற்படி விவரத்தை என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். என் கணவர் விவாகரத்து மனு தாக்கல் செய்த பின்னர் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கறிஞர் மூலமாக ஆஜராகிவிட்டு என் கணவரின் மேல் தேனி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து அந்த மனு உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரணைக்கு வந்தது என்றால் சரிதான். அந்த மனு எதற்காக கொடுத்தேன் என்றால் வரதட்சனை கூடுதலாக கேட்பதாக கொடுத்தேன். என் கணவருக்கும், எனக்கும் பிரச்சனை இல்லையெனில் எதற்காக புகார் கொடுத்தேன் என்றால், தீபாவளி கொண்டாட என் கணவர் வீட்டுக்கு சென்ற போது வரதட்சனை கேட்டு பிரச்சனை செய்தார். மேற்படி சங்கதிகளை என்னுடைய மனு மற்றும் எதிருரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். காவல் நிலைய விசாரணையில் எனது 44 பவுன் நகை, ரூ.5,00,000/- ரொக்கம், சீர்வரிசையாக கொடுத்த பண்ட பாத்திரங்களை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மீதமுள்ள 29 பவுன் நகையை 20.06.2023 என் கணவர் வீட்டில் கொடுத்தால் நான் என் தாலியை கழட்டி கொடுப்பதாக விசாரணையில் ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் குடும்ப பிரச்சனையை சமாதானமாக பேசி எனது நகை மற்றும் பொருட்களை பெற்றுக்கொண்ட பின்னர் எதற்காக அதை நீதிமன்றத்தில் நடைமுறை படுத்தாமல் சேர்ந்து வாழ வேண்டும் என மனு தாக்கல் செய்தேன் என்றால் எங்களை தனிக் குடித்தனம் வாழ வைப்பதற்காக தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தனிக்குடித்தனம் செய்வதற்காக பொருட்களை பெற்றுக்கொண்டால் அது பற்றி காவல் நிலைய விசாரணையில் பதிவு செய்திருப்பார்கள் என்றும், எ.ம.சா.ஆ. 1 ஆவணத்தில் அதை பற்றி குறிப்பிடப்படாத நிலையில் நான் சொல்வது போல் எந்த ஒரு சமாதானமும் பேசப்படவில்லை என்றும், வழக்கிற்க்காக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் காவல்நிலையத்தில் பேசி முடித்த சங்கதிகளை முழுமையாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதற்காக தாலியை கழட்டி கொடுக்கிறேன் என்ற சங்கதிகளை சொல்லவில்லை என்றால், நான் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. காவல்நிலையத்தில் எதற்காக தாலி செயினை கழட்டி கொடுக்க ஒப்பு கொண்டேன் என்றால் காவல்நிலையத்தில் நான் பதற்றத்துடன் இருந்ததால் ஒப்புக்கொண்டேன். காவல்நிலைய ஸ்டேட்மெண்டில் நானும், என் பெற்றோரும் கையெழுத்து போட்டோம். காவல் நிலையத்தில் என் குடும்ப பிரச்சனையை பேசி முடித்து விட்ட நிலையில் என் கணவர் விவாகரத்து மனு தாக்கல் செய்து அதன் விசாரணை முடியும் தருவாயில் கூடுதல் பணம் பெறவேண்டும் என்பதற்காக பின்யோசனை செய்து சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குழந்தையின்மைக்கு மருத்துவ சிகிச்சை என்னை எடுக்க சொன்னார்கள் என்றால் சரிதான். என் கணவரை எடுக்க சொன்னார்கள். என் கணவர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 3 மற்றும் ம.சா.ஆ–4 ஆவணங்களின் படி எனக்கு தான் மருத்துவ குறைபாடு இருந்தது என்றால் சரியல்ல. நாங்கள் கோயம்புத்தூர் சென்று 2 வீடு மாறினோம். நான் தொடர் பிரச்சனை செய்ததால் தான் என் கணவர் குடியிருந்த வாடகை வீட்டை அடிக்கடி மாற்றி கொண்டார் என்றால் சரியல்ல. எனது ஆடம்பர வாழ்க்கைக்கு பணம் வேண்டி என் கணவரிடம் பணம் கேட்டு அவரை பிரச்சனைக்கு உள்ளாக்கினேன் என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டாரை எனது பெற்றோர்கள் மற்றும் நான் லோயர்கேம்ப் சென்று மிரட்டியது சம்பந்தமாக லோயர்கேம்ப் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அப்படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை. எனக்கு உண்மையில் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் கிடையாது என்றும், என் கணவர் தாக்கல் செய்த விவாகரத்து மனுவை இழுத்தடிப்பதற்காகவும், பணம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்திலும், வழக்கை இழுத்தடித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் விவாகரத்து மனுவை அனுமதித்தும், நான் சேர்ந்து வாழ வேண்டும் என தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம். M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.